செய்தி வெளியீடு எண்: 760 நாள்: 23.10.2018

# செய்தி வெளியீடு

## ஆவணப்பதிவின் அவ்வப்போதைய நிலைகுறித்து பொதுமக்கள் இணையவழி எளிதாக அறிந்துகொள்ளும் புதிய வசதி

பதிவுத்துறைக்கான ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான ஸ்டார் 2.0 திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.2.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மைய நோக்கம் "**எளிய மற்றும் வெளிப்படையான பதிவுமுறை**"ஆகும்.

ஸ்டார் 2.0 திட்டத்தின் மைய நோக்கத்திற்கு ஏற்ப மென்பொருளில் கீழ்க்கண்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பதிவு நடைமுறையில் ஒரு வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுங்கு மென்பொருள் வழி உறுதி செய்யப்பட்டுள்ளது.

1. குறித்த நேரத்தில் வரிசைக்கிரமாக பாகுபடற்ற சேவைகளை வெளிப்படையாக பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஏற்ப ஸ்டார் 2.0 மென்பொருளில் இணையவழி நாள் மற்றும் நேரம் முன் பதிவு செய்த நேர வரிசையில் வரிசைக்கிரமமாக(First In First Out) என்ற முறையில் ஆவணம் பதிவு செய்யும் நடைமுறை.
2. ஆவணப்பதிவின் போதே ஆவணம் திரும்ப வழங்கப்படும் தேதி அல்லது ஆவணங்கள் நிலுவை வைக்கப்படின் எந்த

Verified PeaEstate™

காரணத்திற்காக நிலுவை வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் இரசீதில் அச்சிட்டு தரும் நடைமுறை.

3. ஆவணப் பதிவு மறுக்கப்படும் போது எந்த காரணத்திற்காக பதிவு மறுக்கப்படுகிறது என்ற விவரம் அச்சிட்டு பதிவு மறுப்புச் சீட்டு வழங்கும் நடைமுறை.
4. ஆவணத்தின் நிலை குறித்து குறுஞ்செய்தி (SMS) அனுப்பும் வசதி. இந்த குறுஞ்செய்தி ஆவணப்பதிவின் 33 வெவ்வேறு நிலைகளில் அனுப்பப்படுகிறது.

இதன் அடுத்தகட்டமாக ஸ்டார் 2.0 திட்டத்தின் மைய நோக்கத்திற்கு ஏற்ப ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டது முதல் பதிவு செய்த அசல் ஆவணம் திரும்பப்பெறும் வரை ஆவணத்தின் மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கை விவரம் குறித்து பொதுமக்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமோ மட்டுமே தெரிந்து கொள்ளும் நிலையை மாற்றும் விதமாக ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையிலிருந்து திரும்ப வழங்கும் நிலை வரையிலான எந்த ஒரு நிலை குறித்தும் பொதுமக்கள் வீண் அலைச்சல் இன்றி தங்கள் வீட்டில் இருந்தபடியே இணையவழி எளிதாக அறிந்துகொள்ளும் புதிய வசதி 22..10.2018 முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த புதிய வசதியின் வழி பொதுமக்கள் தங்கள் வீட்டில் இருந்தே பதிவுத்துறையின் https://tnreginet.gov.in என்ற இணையதளத்தில்

Verified RealEstate TM

"**ஆவணத்தின் நிலை**" என்ற தெரிவை தேர்வு செய்து தங்களின் தற்காலிக ஆவண எண்ணையோ அல்லது பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் முழுமையான எண்ணையோ அல்லது நிலுவை ஆவண எண்ணையோ அளித்தால் அந்த ஆவணத்தின் மீது எடுக்கப்பட்ட முழு நடவடிக்கைகளும் திரையில் தோன்றும். இதன் மூலம் ஆவணத்தின் தற்போதைய நிலையினை எளிதாக அறிந்து கொள்ளலாம். மேலும் ஆவணம் திரும்ப வழங்க தயாராக இருப்பின் உடன் அலுவலகம் சென்று ஆவணத்தினை திரும்ப பெற்றுக்கொள்ளலாம். இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் வீண் அலைச்சல் வெகுவாக குறையும். இந்த வசதி 19.10.2018 முதல் உருவாக்கப்பட்ட ஆவணங்களுக்கு பொருந்தும்.

**பதிவுத்துறைத்தலைவர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**

Verified RealEstate™